| அனுப்புதல் | பெறுதல் |
|---|---|
| முனைவர் அ. இரமேஷ், | 1.அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள், |
| முதல்வர், | முதன்மைக் கல்வி அலுவலகம் |
| மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி | 2.அனைத்து முதல்வர்கள் |
| நிறுவனம், | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், |
| உத்தமசோழபுரம், சேலம்-10. | |

நக.எண். 71 /அ3/2026 நாள்.17.02.2026

பொருள்.. பள்ளிக்கல்வி - 2023 - 2024 ஆம் கல்வியாண்டிற்கான அறிவிப்பு எண் 11- ஆசிரியர் தேர்வு வாரியத்தின் வாயிலாக தேர்வு செய்யப்பட்டு பணிநியமனம் வழங்கப்பட்ட முதுகலை ஆசிரியர்களுக்கு பணியில் சேருவதற்கு முன்னர் புகுநிலை பயிற்சி வழங்குதல்-தாவரவியல் மற்றும் விலங்கியல் பாட முதுகலை ஆசிரியர்களுக்கு மண்டல அளவிலான பயிற்சி நடைபெறுதல் - புதியதாக பணியில் சேர்ந்த ஆசிரியர்களை பணியிலிருந்து **விடுவித்தல் மற்றும் விவரம் கோருதல்**- தொடர்பாக.

பார்வை.. சென்னை-6, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள் நக.எண் 44750/எப்3/2024 நாள்.14.02.2026.

------

பார்வையில் காணும் செயல்முறைத் தகவலின்படி, 2023 - 2024ஆம் கல்வியாண்டிற்கான அறிவிப்பு எண் 11-ல் தெரிவிக்கப்பட்டவாறு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் வாயிலாக தேர்வு செய்யப்பட்டு 2025-26ஆம் கல்வியாண்டில் பணிநியமனம் வழங்கப்பட்ட தாவரவியல் மற்றும் விலங்கியல் பாட முதுகலை ஆசிரியர்களுக்கு பணியில் சேருவதற்கு முன்னர் கற்றல் கற்பித்தல் மற்றும் அடிப்படை நிருவாகப் பயிற்சி சார்ந்து புகுநிலை பயிற்சி ஏற்காட்டில் 23.02.2026 முதல் 28.02.2026 வரை கீழ்காணும் விவரப்படி உண்டு உறைவிடப் பயிற்சியாக நடைபெறவுள்ளது.இப்பயிற்சியில் பங்கேற்கும் பொருட்டு தங்களது மாவட்டங்களில் உள்ள **அனைத்து அரசு/நல மேல்நிலைப்பள்ளிகளில்(ஆதிதிராவிடர்,சீர் மரபினர் பள்ளிகள்,மாதிரிப் பள்ளிகள்** உட்பட) புதியதாக பணியில் சேர்ந்த தாவரவியல் மற்றும் விலங்கியல் பாட முதுகலை ஆசிரியர்களை பயிற்சி நடைபெறும் நாள்களுக்கு முன்னரே மாலை 6.00 மணிக்குள் பயிற்சி மையத்தை சென்றடையும் வகையில் பணியிலிருந்து விடுவித்து அனுப்பிடுமாறும் அவ்வாறு விடுவிக்கப்படும் ஆசிரியர்களின் விவரங்களை இணைப்பில் காணும் கூகுள் படிவத்தில் 19.02.2026 அன்று மாலை 5.00 மணிக்குள் பூர்த்தி செய்திடுமாறும் தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பயிற்சி மைய விவரம்

| வ.எண் | பாடம் | பயிற்சி மையம் | பயிற்சி நாள் |
|---|---|---|---|
| 1 | விலங்கியல் | Clip View Resort | 23.02.2026 -25.02.2026 |
| 2 | தாவரவியல் | TIO Resort | 26.02.2026-28.02.2026 |

குறிப்பு-பயிற்சி மையம் குளிர்பிரதேசம் என்பதால் பங்கேற்பாளர்கள் தங்களுக்குத் தேவையான பாதுகாப்பு பொருட்களை உடன் எடுத்து வரவும்.

தொடர்புக்கு
1. R. மைதிலி, மு.வி.வி - 9894073844
2. M. கோவலட்சுமி - விரிவுரை - 9842748463

17.2.2026
முதல்வர்
மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்
உத்தமசோழபுரம், சேலம்-10

நகல்
1. மாவட்ட ஆட்சித் தலைவர் சேலம் /மாவட்டங்கள்-தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.
2. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை-6,-தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.
3. இயக்குநர்,பள்ளிக் கல்வி இயக்ககம்,சென்னை- தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

Scanned with OKEN Scanner